www.vikaspedia.in

விகாஸ்பீடியா

வேளாண்மை | உடல்நலம் | கல்வி | சமூக நலம் | எரிசக்தி | மின்னாட்சி

# மின்னணு பணப்பரிவர்த்தனை

## மின்னணு நிதி சேவைகளின் வகைகள்



**அட்டைகள்**

அட்டைகள் என்பவை வழக்கமாக வங்கிகளால் வழங்கப்படுபவை. மூன்று வகைகள் : முன்கூட்டி பணம் செலுத்தும் அட்டை, பற்றுஅட்டை, கடன் அட்டை.




**USSD (ஒழுங்குபடுத்தப்படாத இணைப்புச் சேவை தரவுகள்)**

*99# என்ற மிகச்சிறிய குறியீட்டு எண்மூலம் இந்த சேவையைப்பெறலாம் ஒரு வாடிக்கையாளருக்கு ஒருநாளைக்கு ரூ. 5000 வரையிலான பரிமாற்றத்திற்கு இதனை பயன்படுத்தி கொள்ளமுடியும்.



**ஆதார் எண் மூலம் பணப்பரிமாற்றம் (AEPS - Aadhar Enable Payment System)**

வங்கி, வாடிக்கையாளருக்கு அவரது ஆதார் எண்களை அடையாளமாகக் கொண்டு அவரது கணக்கிலிருந்து பணத்தை அனுப்புவதற்கு அதிகாரமளிக்கும் சேவையாகும்



**ஒன்றிணைக்கப்பட்ட பணப்பரிமாற்ற இடைமுகப்பு (UPI)**

IMPS எனப்படும் உடனடி பணப்பரிமாற்ற சேவையின் மேம்பட்ட வடிவமாகும். 24 மணி நேரமும் வருடம் முழுவதும் வேலை செய்கிறது.



**e-wallet : மின்னணு பணப்பை**

இது ஒருவகை மின்னணு அட்டை. இதன்மூலம் கணினி, சீர்மிகு கைபேசி ஆகியவற்றை பயன்படுத்தி இணையத்தின் வழியாக பணப்பரிமாற்றங்கள் செய்யலாம்.

## USSD (ஒழுங்குபடுத்தப்படாத இணைப்புச் சேவை தரவுகள்)

## (Unstructural Supplementary Service Data)




- உங்கள் வங்கிக் கணக்குடன் உங்கள் கைப்பேசி எண்ணை இணையுங்கள்.
- *99# என்ற எண்ணை டயல் செய்யுங்கள்
- உங்கள் வங்கியின் பெயரின் முதல் மூன்று எழுத்துக்கள் அல்லது IFSC குறியீட்டு எண்ணை பதிவிடுங்கள்
- பணப்பரிமாற்றம் MMID “Fund Transfer MMID” என்ற விருப்பத்தை தெரிவு செய்யுங்கள்.
- பணம் பெற வேண்டியவரின் கைப்பேசி எண்ணையும் MMID குறியீட்டு எண்ணையும் பதிவிடுங்கள்.
- எவ்வளவு பணம் தரப்படவேண்டும் என்பதையும், உங்களது கைபேசி ரகசிய குறியீட்டு எண்ணையும் உங்கள் வங்கிக்கணக்கின் கடைசி 4 எண்களையும் பதிவு செய்யுங்கள்.
- படிப்படியான இத்தகைய வழிமுறைகள் மூலம் நீங்கள் பணப்பரிமாற்றம் செய்துகொள்ள முடியும்.

# ஆதார் எண் மூலம் பணப்பரிமாற்றம்

(AEPS - Aadhar Enable Payment System)



**AEPS பரிமாற்றத்திற்கான முக்கியமான படிகள்**

ஒரு நுண் ATM அல்லது வங்கி முகவரிடம் செல்லுங்கள்

உங்கள் வங்கியின் பெயரையும் ஆதார் எண்ணையும் கொடுங்கள்

என்ன வகையான பரிமாற்றம் தேவை என்பதை தேர்ந்தெடுங்கள்

உங்கள் கைரேகையை ஸ்கேனரில் பதிவிடுங்கள்

பரிமாற்றம் முடிந்தவுடன் ரசீது வரும்

**நீங்கள் இதனைப் பயன்படுத்தி,**

- உங்கள் கணக்கில் பண இருப்பு பற்றி அறியலாம்
- பணம் எடுக்கலாம்
- பணம் போடலாம்
- ஒரு ஆதார் எண்ணிலிருந்து இன்னொரு ஆதார் எண்ணிற்கு பணத்தை பரிமாறிக்கொள்ளலாம்.
- நியாய விலைக் கடைகளில் பொருள்கள் வாங்கலாம்.

# ஒன்றிணைக்கப்பட்ட பணப்பரிமாற்ற இடைமுகப்பு (UPI)



UPI எளிய மூன்றடுக்கு வழிமுறைகளைக் கொண்டு இணையத்தின் மூலம் செயலாற்றுகிறது.

**பதிவு**

- உங்கள் வங்கியின் UPI செயலியை பதிவிறக்கம் செய்து கொள்ளுங்கள்
- உங்கள் வங்கிக் கணக்கு விவரங்களுடன் பதிவு செய்து கொண்டு உண்மை போல இருக்கத்தக்க (Virtual ID) ஒரு அடையாளத்தை உங்கள் பெயர் அல்லது கைபேசி எண்ணை வைத்து உருவாக்குங்கள்
- ஒரு முறை இதனை செய்துகொண்டாலே போதுமானது

**இணையவழி கொள்முதல்**

- வாங்க விரும்பும் பொருளை உங்கள் Cartஇல் சேருங்கள்.
- பணம் செலுத்தும் விருப்ப முறைகளில் UPIயை தேர்ந்தெடுங்கள்
- உங்கள் Virtual IDயை மட்டும் வணிகர்களிடம் கூறுங்கள்

**கைபேசி மூலம் உறுதிப்படுத்துவது**

- உங்கள் கைபேசியின் UPI செயலியில் ஒரு சட்டகம் (Pop-up) தோன்றும். அது உங்களது ஒப்புதலை கேட்கும்
- உங்களது ரகசிய குறியீட்டு எண்ணை அதில் பதிவிடுங்கள்
- பணம் வெற்றிகரமாக பரிமாற்றம் செய்யப்பட்டதற்கான சான்று உங்கள் கைப்பேசிக்கு வந்து விடும்.

*மேலும் தகவல்களை அறிய www.vikaspedia.in வலைதளத்தை பாருங்கள்...*


An Initiative of

सत्यमेव जयते

Ministry of Electronics and Information Technology
Government of India

Implemented by:

सी-डैक CDAC

प्रगत संगणन विकास केन्द्र
CENTRE FOR DEVELOPMENT OF ADVANCED COMPUTING
Scientific Society of The Ministry of Electronics& IT,Govt. Of India
Plot No: 6&7, Hardware Park,Sy. No.1/1, Srisailam Highway Raviryal (V & GP), Via Ragaanna guda Maheshwaram (M), Ranga Reddy district,Hyderabad – 501510,Telangana State, India
Ph: 09849287132
Website : www.vikaspedia.in